சௌகரியங்கள் செய்வதன் மூலம் விவசாயிகள் உற்பத்தியிலே அதிக அக்கறை காட்டுகிற அளவிலே நமக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்ய வழி இருக்கிறது.

சாலைகள் அமைப்பு.

*459 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம் மேலூர்-சேக்கிப்பட்டிச் சாலையில் உள்ள மேலவளவு என்ற ஊரில் அண்மையில் சுமார் 3 பர்லாங் தூரம் வரை தனியார் வசம் உள்ள நிலத்தை வாங்கி சாலை அமைக்கும் செய்ற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும். ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) மேலவளவுக்கருகில் மேலூரிலிருந்து சிக்கிப்பட்டிச் சாலைக்குக் கிளைச்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு எதுமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, 20 ஆண்டுகாலமாக இரு பக்கத்திலேயும் பெருவழித்துறை சாலை இருக்கிறது. இடையிலே சாலையே அமைக்காமல் ஊருக்குள்ளே போக்குவரத்துகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி பெருவழித்துறை அதிகாரிகள் அரசாங்கம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றது என்று கூறுகிறார்கள். விரைவாக அரசு நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சாலை அமைக்க யோசனை பரிசீலனையில் இருக்கிறது. அரசாங்கம் இரண்டாந்தரத் திட்ட வேலைகளின் கீழ் நிதி நிலையை அனுசரித்து இதை சேர்த்துக்கொள்ளும்.

*460 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலக்கட்டளை பொது மக்களிடமிருந்து சாலை வசதி செய்து தர வேண்டும் என கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த வினாவையே கோரிக்கையாக ஏற்று எனது தொகுதியில் உள்ள மேலக்கட்டளை கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த அரசு எப்பொழுதும் கோரிக்கைகளை பரிசீலிக்கும்.

கரூர்—திண்டுக்கல் இருப்புப் பாதை

* 461 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்கு இரயில் பாதை அமைக்கும் திட்டம் எந்த நிலைமையில் இருந்து வருகிறது ?

(இ) எந்தெந்த ஊர் வழியாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?